**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27, வடக்கு ரத வீதி கடையநல்லூர் நகரளவை சர்வே வார்டு J, பிளாக்.32 நகரபுல எண்.32ல் மொத்த விஸ்தீரணம் 1.17.50 ஹெக்டேர் ''சர்க்கார் புறம்போக்கு – பாட்டை'' என நிலவகைப்பாடு செய்யப்பட்டு இந்நகராட்சியின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் அமைந்துள்ள (Government Vested Municipality) பிரஸ்தாப புலத்தில் 800.00ச.மீ பரப்பளவில் கடையநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நிலமாற்றம் செய்வதற்குரிய பிரேரணையின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக இந்நகராட்சியின் ஆளுகையிலிருந்து விடுவித்து தடையின்மைச் சான்று வழங்குதல் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) தென்காசி, அவர்களின் கடிதம் ந.க.எண்.ஜி3/1486/2020, நாள்.02.08.2021ன்படி தெரிவக்கப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இந்நகராட்சி நகராட்சி பொறியாளர் குடியிருப்பு வளாகப்பகுதியின் வடக்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள காலிமனையின் ஒருபகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பிரஸ்தாப நிலத்தின் மூன்று பக்கங்களில் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர் அமைந்துள்ளது. மேற்கண்ட பிரஸ்தாப காலியிடம் இந்நகராட்சியின் பிற்கால பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்துவதற்கு தேவையாக இருப்பினும், மேற்கண்ட திட்டம் இந்நகர் பொதுமக்களின் அத்தியாவசிய கடையநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சீரிய திட்டமாக இருப்பதினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பிரஸ்தாப நிலத்தில் கடையநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்குதல் தொடர்பாக மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 923/ 2021/எப்1)**

**தீர்மான எண். 552**

தென்காசி துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களின் 27.07.2021ம் தேதிய கடிதத்தின்படி, மேற்படி பிரஸ்தாப புலத்தில் கடையநல்லூர் நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்க அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27, வடக்கு ரத வீதி கடையநல்லூர் நகரளவை சர்வே வார்டு J, பிளாக்.32 நகரபுல எண்.32ல் மொத்த விஸ்தீரணம் 1.17.50 ஹெக்டேர் ''சர்க்கார் புறம்போக்கு – பாட்டை'' என நிலவகைப்பாடு செய்யப்பட்டு இந்நகராட்சியின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் அமைந்துள்ள (Government Vested Municipality) பிரஸ்தாப புலத்தில் 800.00ச.மீ பரப்பளவில் கடையநல்லூர் நகராட்சி கிளை நூலகம் அமைப்பதற்கு நிலமாற்றம் செய்வதற்குரிய பிரேரணையின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக இந்நகராட்சியின் ஆளுகையிலிருந்து விடுவித்து தடையின்மைச் சான்று வழங்குதல் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) தென்காசி, அவர்களின் கடிதம் ந.க.எண்.ஜி3/2167/2019, நாள்.15.02.2021 மற்றும் 02.08.2021ன்படி தெரிவக்கப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சி கிளை நூலகம் அமைப்பதற்கு இந்நகராட்சி பொறியாளர் குடியிருப்பு வளாகப்பகுதியின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள காலிமனையின் ஒருபகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பிரஸ்தாப நிலத்தின் கிழக்கு பகுதியினை ஒட்டி வளமீட்பு மையம் (Resource Recovery Centre) அமைந்துள்ளது. மேற்கண்ட பிரஸ்தாப நிலத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர் மற்றும் தற்போது செயல்பாட்டியில்லாத இரு கழிவுநீர்த் தொட்டிகள் அமைந்துள்ளது. மேற்கண்ட பிரஸ்தாப காலி இடம் இந்நகராட்சியின்

பிற்கால பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்துவதற்கு தேவையாக இருப்பினும், மேற்கண்ட திட்டம் இந்நகர் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு வடிவங்களில் தகவல்களைத் தடையின்றி பெற்றுக் கொண்டு வளர்ச்சி பெறுவதற்கான ஓர் அரிய திட்டமாக இருப்பதினை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பிரஸ்தாப நிலத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள இந்நகராட்சி பொறியாளர் குடியிருப்பு பகுதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கடையநல்லூர் நகராட்சி கிளை நூலகம் அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 923/ 2021/எப்1)**

**தீர்மான எண். 553**

திருநெல்வேலி, மாவட்ட நூலக அலுவலர் அவர்களின் வேண்டுகோளின்படி மேற்படி பிரஸ்தாப புலத்தில் கடையநல்லூர் நகராட்சி கிளை நூலகம் அமைப்பதற்கு தடையின்மை சான்று வழங்க அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்–3**

நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அலுவலக குறுஞ்செய்தியில் தெரிவித்துள்ள படி கடையநல்லூர் நகராட்சி பகுதியில் உள்ள குடியிறுப்புகளில் தனிநபர் கழிப்பிடங்கள் இல்லாத வீடுகள் கணக்கீடு செய்து தனிநபர் கழிப்பிடங்கள் கட்ட முடியாத பகுதிகளில் சமுதாய கழிப்பிடங்கள் அமைக்க திட்ட பிரேரணை சமர்பிக்க தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் தனிநபர் கழிப்பிடங்கள் கட்ட முடியாத பகுதிகளில் 4 எண்ணம் ( 36 இருக்கைகள்) சமுதாய கழிப்பிடங்கள் கட்ட ரூ. 40.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எ ண் | பணியின் பெயர் | எண்ணம் | இருக்கைகள் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.01 குமந்தாபுரம் அரசு ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | 1 | 9 | 10.00 |
| 2. | வார்டு எண்.01 குமந்தாபுரம் நடுத்தெரு பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | 1 | 9 | 10.00 |
| 3. | வார்டு எண்.22 இந்திராநகர் புதிய குடியிருப்பு பகுதியில் ( அங்கன்வாடி மையம் அருகில்) சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | 1 | 9 | 10.00 |
| 4. | வார்டு எண்.22 இந்திராநகர் அரசு மாணவர் விடுதி தென்பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | 1 | 9 | 10.00 |
| | மொத்தம் | **4** | **36** | **40.00** |

மேற்காணும் விபரப்படி உள்ள சமுதாய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஆகும் தொகையினை அரசின் மான்யமாக ஒதுக்கீடு செய்து உரிய நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை சமர்ப்பிக்க மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 3479/2021/இ1)**

**தீர்மான எண். 554**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள சத்துணவு மையங்களில் உள்ள காலிச் சாக்குகள் மொத்தம் 156/–ஐ பொது ஏலமிட்டு அப்புறப்படுத்த இந்நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி நாள்.16.07.2021ன்படி 02.08.2021 அன்று குறுகியகால பொது ஏலமிடப்பட்டதில் வரப்பெற்ற ஏலக் கேள்விகளை நகர்மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் முகவரி | உயர்த்தப்பட்ட ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1) | திரு.கே.எஸ் அப்துல் மாலிக்,<br>ஒப்பந்ததாரர் ,<br>கடையநல்லூர். | 1200/– |
| 2) | திரு. P.சாகுல் கமீது,<br>ஒப்பந்ததாரர் ,<br>கடையநல்லூர். | 1125/– |
| 3) | திரு. P.பாலசுப்பிரமணியன்,<br>ஒப்பந்ததாரர் ,<br>கடையநல்லூர். | 1150/– |
| 4) | திரு.எஸ்.முருகையா,<br>ஒப்பந்ததாரர் ,<br>கடையநல்லூர். | 900/– |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள ஏலக்கேள்விகளில் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.1200/–க்கு கேட்டுள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.கே.எஸ் அப்துல் மாலிக், ஒப்பந்ததாரர் கடையநல்லூர் என்பவருக்கு உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2320/ 2021/சி1)**

**தீர்மான எண். 555**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

கடைநல்லூர் நகராட்சி – மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி அவர்களின் கடித ந.க.எண். ஔ4/71/2021 நாள்.19.03.2021ன்படி சட்டமன்ற தேர்தல்–2021 வாக்கு எண்ணும் இடமான கொடிக்குறிச்சி USP கல்லூரி வளாகத்தில் **Mobile Toilet** அமைக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சி மூலம் தற்காலிகமாக **Mobile Toilet Container** அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதனடிப்படையில் சட்டமன்ற தேர்தல்–2021க்கு வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற பின் தற்காலிக **Mobile Toilet Container**-யை இந்நகராட்சி மேலக்கடையநல்லூர் பொறியாளர் குடியிருப்பு வளாகத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பபட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் வாகனத்தினை **(Mobile Toilet Container)** அருகிலுள்ள நகராட்சிகளில் திருவிழா மற்றும் VIP–கள் வருகை தரும் பட்சத்தில் **“இலவசமாக“** கேட்டு விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன. ஆகவே மேற்காணும் வாகனத்தினை முறையாக சாலைகளில் அனுமதிப்பதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் தென்காசி அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் மேற்காணும் வாகனமானது சட்டமன்ற தேர்தல்–2021க்கு அவசர அவசியம் கருதி உடனடியாக நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளப்பட்டது. இதற்கான செலவீனத்தை ஈடுகட்டும் பொருட்டும், மேற்காணும் வாகனத்தை பராமரிக்கும் பணியாளர் ஊதியம் மற்றும் தொடர்பு ஊர்தி **(Tractor)** எரிபொருள் ஆகியவற்றை கருத்திற்கொண்டும் கீழ்காணும் விபரப்படி தொகை நிர்ணயம் செய்து செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | தொகை ரூ. (8 மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1. | அரசு விழா அனைத்திற்கும் | 2000/— |
| 2. | பொது விழா அனைத்திற்கும் | 5000/— |

அ) மேலும் மேற்காணும் **Mobile Toilet Container-**யை சாலையில் இயக்க உரிய அனுமதியினை வட்டார போக்குவரத்து அலுவலரிடம் பெற்று செயல்படுத்தவும் அதற்கான செலவீத்தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ஆ) மேலும் மேற்காணும் வாகனத்தை பொதுசுகாதாரப்பிரிவில் ஒப்படைத்து செயல்படுத்தவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க. எண். 3586/2021/இ1)**

**தீர்மான எண். 556**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு. R.கோமதிநாயகம் ஒப்பந்தகாரர் என்பவர் 2018—2019ம் ஆண்டில் வருவாய் தலைப்பு நிதியின் கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணி முடிவு பெற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.27 பவுண்டு கீழத்தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை பராமரிப்பு பணி | 22500/— |

மேற்காணும் விபரப்படி உள்ள பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ. 22500/—யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.22500/—யை R.கோமதிநாயகம் ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண். 3479/2021/இ1)**

**தீர்மான எண். 557**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு. R.முருகன் ஒப்பந்தகாரர் என்பவர் 2016—2017ம் ஆண்டில் வருவாய் தலைப்பு நிதியின் கீழ் எடுத்து செய்த

கீழ்காணும் பணி முடிவு பெற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்இணைப்புகள் மற்றும் வயரிங் புதுபித்தல் பணி | 24250/– |

மேற்காணும் விபரப்படி உள்ள பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ. 24250/–யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.24250/–யை R.முருகன் ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண். 3488/2021/இ1)**

**தீர்மான எண். 558**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திருமதி. P.சண்முகத்தாய் ஒப்பந்தகாரர் என்பவர் 2016–2017ம் ஆண்டில் வருவாய் மற்றும் குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை கூழாக்கும் இயந்திரம் நிறுவி மின் இணைப்பு மற்றும் மின்மோட்டார் பொருத்தும் பணி. | 14000/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.11 காளியம்மன் கோவில் தெருவில் சின்டெக்ஸ் அமைத்தல் பணி. | 13547/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி – வறட்சி நிவாரணத்திட்டம் 2013–2014 அடிபம்பு அமைத்து தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 34000/– |
| | மொத்தம் | 61547/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1முதல் 3 வரை உள்ள பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ. 61547/–யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு

எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ. 61547/—யை திருமதி. P.சண்முகத்தாய் ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண். 3489/2021/இ1)**

**தீர்மான எண். 559**

அனுமதிக்கப்பட்டது.

**(ஓம்)S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**